<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 80/2021 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.ஜீவானந்தம் | | | |
| **Date** | **:** | **27.01.2026** | | | |
| **Time** | **:** | **11.23 a.m to 12.06 p.m** | | | |

<u>நி.த.சா.**1.**ஜீவானந்தம் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எங்கள் நிறுவனம் ஹைட்ராலிக் சிலிண்டர் உற்பத்தி செய்கிறார்கள். எங்களைப் போன்ற ஹைட்ராலிக் சிலிண்டர் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் என்னென்ன அருகில் உள்ளன என்றால் Wipro நிறுவனம் உள்ளது பிள்ளைபாக்கத்தில் Mechatronics என்ற நிறுவனமும் உள்ளது. உங்கள் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் யார் என்றால் Dalton hydraulics, Delavan hydraulics, Donfoss etc., மேற்படி வாடிக்கையாளர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்கள் என்றால் நார்த் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர்கள் ஆவார்கள். Eaton, Sakthiman,ஆகியோர் எங்களின் வாடிக்கையாளர்களா என்றால் Donfoss முதலில் ஈட்டனாக அழைக்கப்பட்டு வந்தது. Wastech எங்களின்

வாடிக்கையாளரா என்றால் ஆமாம். அவர்களும் நார்த் அமெரிக்காவை சேர்ந்தவர்கள். Sakthiman இந்தியாவை சேர்ந்ததாகும். மேற்படி வாடிக்கையாளர்களுக்கு எங்கள் நிறுவனம் தொடங்கப்பட்ட 2010 ஆம் ஆண்டில் இருந்து ஆர்டர்கள் வழங்கப்பட்டு வருகிறதா என்றால் Wastech, சக்திமான் தவிர மற்ற நிறுவனங்களுக்கு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. Wastech நிறுவனத்திற்கு 2011-ல் இருந்து சப்ளை நிறுத்தப்பட்டது. Sakthiman நிறுவனத்திற்கு தோராயமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக சப்ளை நிறுத்தப்பட்டுள்ளது. எங்கள் நிறுவனத்தின் Annual Turn Over சுமார் 120 கோடி இருக்கும். 2018-2019 ஆம் ஆண்டுகளில் எங்கள் Annual Turn Over எவ்வளவு என்றால் தோராயமாக 100 லில் இருந்து 120 கோடி இருக்கும். எங்கள் நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை எங்களால் தாக்கல் செய்ய இயலும். மேற்படித் தொகையில் தொழிலாளர்களின் சம்பளம் பொறுத்து எத்தனை சதவிகிதம் அடங்கும் என்றால் தெரியாது. தொழிலாளர்களின் ஊதியம் பொறுத்து எவ்வளவு தொகை செலவாகும் என்றால் தெரியாது. 2017-2019 காலகட்டத்தில் எங்கள் நிறுவனத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை பார்த்தார்கள் என்றால் சுமார் 50 பேர் இருப்பார்கள். எங்கள் நிறுவனத்தில் தொழிலாளர்கள், பணியாளர்கள், பயிற்சி தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் ஆகியோர் எவ்வளவு பேர்

என்றால் சுமார் 200 பேர் இருப்பார்கள். ஒப்பந்த தொழிலாளர்களின் பணி என்ன என்றால் Material Movement (Loading Unloading)ஆகும். பயிற்சி தொழிலாளர்களின் வேலை என்ன என்றால் அவர்கள் Assist செய்வார்கள். யாருக்கு அசிஸ்ட் செய்வார்கள் என்றால் மேற்பார்வையாளர், மூத்த ஆப்ரேட்டர்கள், Engineers, Managers, ஆகியோருக்கு Assist செய்வார்கள். நான் 2011 ல் இருந்து எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எங்கள் நிறுவனத்திற்கு hydraulics உற்பத்தி செய்வது சம்பந்தமாக போதிய அனுபவம் உள்ளது என்றால் ஆமாம். Bailey நிறுவனம் எந்த வருடம் மூடப்பட்டது என்றால் தெரியாது. Bailey நிறுவனத்திற்கும் எங்கள் நிறுவனத்திற்கும் தொழிலாளர்களை மாற்றம் செய்து கொள்வதற்கு ஏதேனும் ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. Bailey நிறுவனம் எதற்காக மூடப்பட்டது என்றால் தொழிற்தகராறு சம்பந்தமாக மூடப்பட்டது என தெரியவந்தது. Bailey நிறுவனத்தில் நான் வேலை பார்த்தேனா என்றால் ஆமாம். எத்தனை ஆண்டுகள் வேலை பார்த்தேன் என்றால் தோராயமாக மூன்று ஆண்டுகள் வேலை பார்த்தேன். எந்த ஆண்டு அந்த நிறுவனத்தை விட்டு வெளியே வந்தேன் என்றால் 2009 ஆம் ஆண்டு என நினைக்கிறேன். Bailey நிறுவனத்தில் என்ன மாதிரி தொழிற்தகராறு இருந்தது என தெரியாது. Bailey நிறுவனத்தில் எனக்கு வேலை இழந்த காரணத்தினால்

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மனிதாபிமான அடிப்படையில் வேலை வழங்கப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை. எனக்கு வேலை இழப்பு எதுவும் ஏற்படவில்லை நானாக தான் வேலையை ராஜினாமா செய்தேன். எங்கள் நிறுவனத்திற்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து பெர்பார்மன்ஸ் சார்பாகவும் உற்பத்தி சார்பாகவும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நி**.**சா**.**ஆ**.3** ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டு உள்ள வின்சென்ட் வெல்டர் ஆவார். சிவராமன் SPM Operator ஆவார். ரகுராமன் வெல்டர் ஆவார், கார்த்திக் Assembly Operator ஆவார். கணேஷ் என்பவர் De-burring Operator ஆவார். தொழிலாளர் குழுவிற்கு கடைசியாக எப்போது தேர்தல் நடந்தது என்றால் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது. அந்த தேர்தல் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலும். நி**.**சா**.**ஆ**.4** 01.02.2020 முதல் அடுத்த மூன்று ஆண்டுக்கான ஒப்பந்தம் என்றால் ஆமாம். நி**.**சா**.**ஆ**.3** 01.05.2014 முதல் 30.04.2017 வரைக்கானது என்றால் ஆமாம். 01.05.2017 முதல் 31.01.2020 வரைககான காலகட்டத்திற்கு ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கு 2017 முதல் 2019 ஆம் ஆண்டிற்கான இடைப்பட்ட காலத்திற்கான கோரிக்கை சம்பந்தப்பட்டது என்றால் பரிந்துரையில் எந்த காலத்திற்கு என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. 2017-2019

காலகட்டத்திற்கு தொழிலாளர் குழு உடன் 10 சதவீத ஊதிய உயர்வு சம்பந்தமாக ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் தொழிலாளர்களுடன் பேசி முடிவு செய்யப்பட்டு ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்படி காலகட்டத்திற்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது என காட்ட ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2017-2020 அண்டிற்கான 10 சதவிகித ஊதிய உயர்வு சம்மந்தமாக பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து போடப்பட்டுள்ளதா என்றால் ஊதிய உயர்வு வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் 2017, 2018, 2019 ஆம் ஆண்டிற்கு தொழிலாளர்களுடன் பேசி தான் ஒப்புக்கொள்ளப்பட்டது என்ற வாசகம் கண்டுள்ளதா என்றால் இல்லை ஆனால் தொழிலாளர்களின் நலன் கருதி 2017 முதல் 2019 வரை ஊதிய உயர்வு வழங்கப்பட்டது என கண்டுள்ளது.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.01.29 17:11:35 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:27.01.2026